අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

ඉසුරුපාය, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 | +94112785818
info@moe.gov.lk | www.moe.gov.lk

මගේ අංකය / எனது இல. / My Ref. } **ED/1/9/2/11/2 – 2021**

ඔබේ අංකය / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } **2021.01. 18**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்

சகல மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதி/உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்

சகல பாடசாலை அதிபர்கள் (ஆரம்ப வகுப்புக்கள் நடைபெறும் அரச பாடசாலைகள் மற்றும் அரச உதவி பெறும்/ பெறாத தனியார் பாடசாலைகள்)

**2021 ஆம் வருடம் தரம் 01 இற்கு உள்வாங்கப்படவுள்ள சிறார்களுக்காக முறையாக வகுப்புக்களை ஆரம்பித்தல்**

அரச பாடசாலைகள் மற்றும் அரச உதவி பெறும்/பெறாத தனியார் பாடசாலைகளில் **2021** ஆம் வருடத்தில் தரம் 01இன் சிறார்களுக்காக முறையாக வகுப்புக்களை ஆரம்பிக்கும் நிகழ்வு **2021.02.15** ஆம் திகதி நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய **2021.02.15** ஆம் திகதி முறையாக தரம் 01 இற்கான வகுப்புக்களை ஆரம்பிக்கும் போது அதிபர்களால் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள **ED/01/21/07/03 –2020 (iii)** இலக்கமும் மற்றும் **2021.01.04** ஆம் திகதியும் இடப்பட்ட **Covid–19** தொற்று நிலையின் கீழ் சுகாதார பாதுகாப்புடன் கூடியவாறு பாடசாலைகளைத் திறத்தல் என்ற கடிதத்துடன் முன்வைக்கப்பட்டுள்ள ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள **ED/01/09/06/01/05–2021 (1)** இலக்கமும் மற்றும் **2021.01.07** ஆம் திகதியும் இடப்பட்ட அரச பாடசாலைகள் மற்றும் அரச உதவி பெறும்/பெறாத தனியார் பாடசாலைகளை 2021 ஆம் வருடத்தில் புதிய பாடசாலைத் தவணைக்காக ஆரம்பித்தல் என்ற கடிதத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளையும் பின்பற்ற வேண்டும்.

மேலும் கல்வி அமைச்சினால் **2020.05.11** ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள **15/2020** இலக்கமும் **Covid–19** தொற்றை பரவுதலைத் தடுப்பதற்காகப் பாடசாலைகள் மற்றும் கல்வி நிலையங்களைத் தயாரப்படுத்துவதற்கான சுற்று நிருபம் மற்றும் ஆலோசனைப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்களையும் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளையும் பின்பற்ற வேண்டும் என்பதுடன் கடந்த வருடங்களில் நடாத்தப்பட்டவாறான தரம் 01 இற்கான சிறார்களை வரவேற்கும் வைபவம், கூட்டங்கள் ஆகியற்றை நடாத்தக்கூடாது. 2021.02.15 ஆம் திகதிக்குப் பின்னர் பிள்ளைகளை இனங்காணும் செயற்பாடுகளை சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்றவாறு நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுடன் செயற்பாடுகளுக்காக சகல மாணவர்களையும் ஒரே நேரத்தில் அழைப்பதைத் தவிர்க்க வேண்டும் என்பதையும் கவனத்திற்குத் தருகின்றேன்.

இது தொடர்பாகத் தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பை மேலாக மதிக்கிறேன்.

பேராசிரியர் கே.கபில.சீ.கே.பெரேரா
செயலாளர்
கல்வி அமைச்சு

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 | +94112784825 | minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 | +94112785162 | secretary.education@moe.gov.lk